# விவசாய - கால்நடை அபிவிருத்திக் கடன் திட்டத்தின் செயற்திறன் மற்றும் நல்லாளுகை தொடர்பான செயலாற்றல் அறிக்கை

# 2010/2011



கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்

# உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | நிறைவேற்றுப் பொழிப்பு | 3 |
| 2. | அறிமுகம் | 6 |
| | 2.1 குறிக்கோள்கள் | 6 |
| | 2.2 கணக்காய்வுத் தெரிவிற்கான காரணங்கள் | 7 |
| | 2.3 கணக்காய்வின் நோக்கெல்லை | 7 |
| | 2.4 கணக்காய்வு நிர்ணயங்கள் | 8 |
| 3. | விபரமான கணக்காய்வு அவதானிப்புகளும் பரிந்துரைகளும் | 9 |
| | 3.1 பொது அவதானிப்புகள் | 9 |
| | 3.2 பங்கேற்புக் கடன் நிறுவகங்களின் செயலாற்றல் | 16 |
| | 3.3 கண்காணிப்பு முகவரகங்களின் நடவடிக்கைகள் மீதான அவதானிப்புகள் | 25 |
| 4. | கணக்காய்வு முடிவுகள் | 31 |
| | இணைப்பு - 1 விவசாய கால்நடை அபிவிருத்திக் கடன் பற்றி | 33 |
| | இணைப்பு - 2 கணக்காய்வு பற்றிய மேலதிகம் | 36 |
| | இணைப்பு - 3 செயற்பாட்டுக் கணக்காய்வை நடாத்துவதில் உள்ள வரையறைகள் | 38 |

# 1. நிறைவேற்றுப் பொழிப்பு

இலங்கையில் திரவப் பால் செயன்முறைப்படுத்தல் மற்றும் பயிர் செயன்முறைப்படுத்தல் கைத்தொழில் அபிவிருத்திக்கு உதவியளிப்பதற்கும் சிறிய விவசாயிகளின் விவசாய மற்றும் கால்நடை அபிவிருத்திச் செயற்திட்டங்களுக்காக நிதியளிப்பதன் மூலம் அவர்களை வலுப்படுத்துவதற்கும் அரசாங்கத்தால் விவசாய கால்நடை அபிவிருத்திக் கடன் திட்டம் (ALDL) 2008 ஆம் ஆண்டின் போது அறிமுகப்படுத்தப்பட்டது. இதே வேளை, 2008 பெப்ரவரி 08 ஆம் திகதி நடைபெற்ற அதன் கூட்டத்தில் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையால் விவசாய கால்நடை அபிவிருத்திக் கடன் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்கள் மீதான ஓர் மானிய வட்டியை வழங்குவதற்கும் தீர்மானித்திருந்தது.

விவசாய கால்நடை அபிவிருத்திக் கடன் திட்டத்தின் சிக்கனம், பயனுறுதி, செயற்திறன் என்பவற்றை நிர்ணயிப்பதற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தால் இந்த செயலாற்றல் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. கணக்காய்வு நடைமுறை விவசாய கால்நடை அபிவிருத்திக் கடன் திட்டத்தில் கலந்து கொண்ட நிறுவகங்களின் பல்வேறு உத்தியோகத்தர்கள் மற்றும் அடித்தள நிலையில் உள்ள இறுதி நலன் பெறுனர்களுடனான சந்திப்பு கணக்காய்வு செயன்முறையில் உள்ளடக்கப்பட்டது.

கணக்காய்வின் குறிக்கோள்களானவை புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குதல், பால் மற்றும் பயிர்களின் செயன்முறைப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக கடன் வழங்கப்பட்ட நடுத்தரக் கடன்களின் முன்னேற்றத்தை அறிந்து கொள்ளல் பாற்பண்ணையாளர்களுக்கு அவர்களது வியாபாரத்தை தீர்க்கமான முறையில் மேற்கொள்வதற்கு புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதற்கு ஏற்படுத்தப்பட்ட வழிமுறைகள் மற்றும் வாழ்வாதார மட்டத்தில் இருந்து வர்த்தக மட்டத்திலான விவசாயத்திற்கு மாற்றமடைவதற்கு கடன் திட்டத்தின் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட சந்தர்ப்பங்களையும் கிரய வினைத்திறனையும் மதிப்பிடுதல் என்பனவாகும். கடன் திட்டத்தின் கீழ் பண்ணை நடவடிக்கைகளின் வினைத்திறன் முன்னேற்றமடைவதை மதிப்பிடல் மற்றும் கடன் வட்டி மானியத் திட்டம் மற்றும் விவசாய கால்நடை அபிவிருத்திக் கடன் திட்டத்திற்கு இதனாலான பங்களிப்பை மதிப்பிடுவதும் இதனுள் அடங்கும்.

கணக்காய்வின் போது மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் பின்வருமாறு பொழிப்பாக்கித் தரப்பட்டுள்ளன.

(அ) கடந்த ஆண்டுகளின் போது நாட்டின் பால் உற்பத்தி அதிகரித்திருந்தது. எவ்வாறெனினும், பால்மாவின் இறக்குமதி அளவு விவசாய கால்நடை அபிவிருத்திக் கடன் திட்டத்தின் அறிமுகத்துடன் குறிபிடத்தக்க அளவில் வீழ்ச்சியடைந்துள்ளது.

(ஆ) விவசாய கால்நடை அபிவிருத்திக் கடன் திட்டத்தின் மூன்றாண்டு காலப்பகுதியில் முதல் ஒன்றரையாண்டு காலப்பகுதியின் போது ரூபா 5,000 மில்லியன் தொகையான மொத்த நிதி ஒதுக்கீட்டில் 21.45 சதவீதம் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தமையால் திட்டமானது திட்டமிடப்பட்டவாறு வினைத்திறனாக இருக்கவில்லை.

(இ) விவசாய கால்நடை அபிவிருத்திக் கடன் திட்டத்தின் மூலம் தோற்றுவிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட புதிய வேலை வாய்ப்புக்கள் மிகவும் குறைந்த மட்டத்தில் நிலவியது.

(ஈ) திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட நலன்களில் ஒன்றான புதிய விவசாய நடைமுறைகள் மீதான தொழில்நுட்ப அறிவு விவசாயிகளுக்கு ஆக்கபூர்வமான முறையில் மாற்றப்பட்டிருக்கவில்லை.

(உ) திட்டமிடப்பட்டவாறு கண்காணிக்கும் மற்றும் பங்கேற்கும் நிறுவகங்களுக்கிடையே ஒருங்கிணைப்பு நிலவியிராமையால் இதன் விளைவாக ஏற்பாடு செய்யப்பட்ட நிதி ஆக்கபூர்வமாகப் பயன்படுத்தப்படுவதற்காக விவசாய கால்நடை அபிவிருத்திக் கடன் திட்ட நடவடிக்கைகள் பாற் பண்ணை விவசாயிகளுக்கிடையே பிரபல்யப்பட்டிருக்கவில்லை.

2008 - வரவு செலவுத்திட்ட உரையில் பிரேரிக்கப்பட்டவாறு, நாட்டின் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்காக அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட முயற்சிகளுக்கு நிதி திட்டமிடல் அமைச்சினாலும் இலங்கை மத்திய வங்கியாலும் அமுலாக்கப்பட்ட விவசாய கால்நடை அபிவிருத்திக் கடன் திட்டத்தின் மூலம் உதவியளிக்கப்பட்டது. மேலும் திட்டம் ஆக்கபூர்வமாகவும் வினைத்திறனாகவும் செயற்படுத்தப்படுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதி சிக்கனமாகப் பயன்படுத்தப்படுவதற்கு ஏற்றவகையில் நிறுவகத்தின் ஒத்துழைப்பு கிடைக்கப்பெறாத காரணத்தினால் நாட்டின் சிறிய அளவிலான கால்நடை பண்ணை கைத்தொழிலின் வெற்றியும் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கு கடன் திட்டத்தை உயர் மட்டத்தில் முழுமையான பங்களிப்பைச் செலுத்திராமை அவதானிக்கப்பட்டது.

## முடிவுரை

தேசிய மற்றும் பிரதேச மட்டத்தில் வேறு பல்வேறு நிறுவகங்களினால் செயற்படுத்தப்பட்ட ஏனைய இணையான செயற்திட்டங்கள் காரணமாக நாட்டின் திரவப் பால் உற்பத்தியை மேம்படுத்துவதற்காக விவசாய மற்றும் பாற்பண்ணை அபிவிருத்திக் கடன் திட்டச் செயற்பாட்டினாலான தாக்கத்தைக் கணக்காய்வின் போது நிச்சயமாக முடிவு செய்ய முடியாதிருந்தது. மேலும், பங்கேற்பு நிதி நிறுவகத்தினால் விவசாய மற்றும் பாற்பண்ணை அபிவிருத்திக் கடன் திட்டம், சில மாவட்டங்களில் அதே வகையில் செயற்படுத்தப்பட்டிருந்ததுடன் சில மாவட்டங்களில் வேறு பங்கேற்பு நிதி நிறுவகங்களினால் விவசாய மற்றும் பாற்பண்ணை அபிவிருத்திக் கடன் திட்ட முறையின் இலக்கு எய்தப்பட முடியாதிருந்தது. விவசாய மற்றும் பாற்பண்ணை அபிவிருத்திக் கடன் திட்ட முறையைச் செயற்படுத்தும் செயற்பாட்டுடன் தொடர்பான உத்தியோகத்தர்களின் அனுபவத்தைப் பகிர்ந்து கொள்வதற்காகவும் பிரதேச மட்டத்தில் உண்மையான பிரச்சனைகளைப் புரிந்து கொள்வதற்காகவும் கூடிய கவனத்தைச் செலுத்தி பாற்பண்ணைத் துறையின் சகல நிறுவகங்களையும் தொடர்புபடுத்துவதற்கு நிச்சயமான முறைமை ஸ்தாபிக்கப்பட வேண்டும் என்பதே முடிவாகும்.

## 2. அறிமுகம்

சிறிய விவசாயிகளின் விவசாய மற்றும் பாற்பண்ணை அபிவிருத்திச் செயற்திட்டங்களுக்காக நிதியளிப்பைப் பெற்றுக்கொள்வதனை வலுப்படுத்துவதற்காகவும் இதற்கு இணையாக இலங்கையில் திரவப் பால் செயன்முறைப்படுத்தல் மற்றும் பயிர் செயன்முறைப்படுத்தல் கைத்தொழில்களை ஒரேசமயத்தில் அபிவிருத்தி செய்வதற்கு உதவியளிப்பதற்கு 2008 ஆம் ஆண்டின் போது அரசாங்கத்தால் விவசாய கால்நடை அபிவிருத்திக் கடன் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. 2008 பெப்ரவரி 08 ஆம் திகதி நடைபெற்ற இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபைக் கூட்டத்தில் விவசாய கால்நடை அபிவிருத்திக் கடன் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்களின் அடிப்படையில் வட்டி மானியமொன்றை வழங்குவதற்கும் தீர்மானித்திருந்தது. மேலும், கால்நடை அபிவிருத்தி நடவடிக்கைகளில் செயற்திறனாக ஈடுபடும் கால்நடை அபிவிருத்தி அமைச்சின் விஸ்தரிப்பு உத்தியோகத்தர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவு ஒன்றிற்கு இரு வருட காலத்திற்கான கொள்கை உருவாக்கல் நிதியமும் இலங்கை மத்திய வங்கியால் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. கடன் திட்டத்தை அமுலாக்குவதற்காக சான்றுறுதியளிக்கப்பட்ட 14 வங்கிகளை கடன் நிறுவகங்களாகப் பங்கேற்புச் செய்வதற்கு இலங்கை மத்திய வங்கி நடவடிக்கை எடுத்திருந்தது.

### 2.1 குறிக்கோள்கள்

இச் செயலாற்றல் கணக்காய்வின் குறிக்கோள்கள் பின்வருமாறாகும்.

(அ) கடன் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட புதிய வேலை வாய்ப்புகளை மதிப்பிடல்

(ஆ) பால் மற்றும் பயிர் செயன்முறைச் செயற்பாடுகளுக்காக வழங்கப்பட்ட மத்திய காலக் கடன்கள் தொடர்பான முன்னேற்றத்தை மதிப்பிடல்

(இ) புதிய தொழில்நுட்பங்களைக் கையாள்வதற்கும் அவர்களது வியாபாரத்தை தீர்க்கமாகவும் கிரய வினைத்திறனுடனும் பயன்படுத்தப்படுவதற்காக பாற்பண்ணை விவசாயிகளுக்கு வழிவகுத்த வழிமுறைகளை மதிப்பிடல்.

(ஈ) வாழ்வாதார மட்டத்தில் இருந்து வர்த்தக மட்டத்திலான விவசாயத்திற்கு விவசாயிகளை மாற்றுவதற்கு கடன் திட்டத்தின் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட சந்தர்ப்பங்களையும் மதிப்பிடல்.

(உ) கடன் திட்டத்தின் கீழ் விருத்தியடைந்த பண்ணை நடவடிக்கைகளின் உற்பத்தித்திறனை மதிப்பிடல்.

(ஊ) கடன் வட்டி அடிப்படையில் மானியத் திட்ட முன்னேற்றம் மற்றும் விவசாய கால்நடை அபிவிருத்திக் கடன் திட்ட வெற்றிக்கு இதனாலான பங்களிப்பை மதிப்பிடுதல்.

2008 மார்ச் 01 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2010 யூன் 30 வரையான செயற்திட்டக் காலப்பகுதியில் பூர்த்தியாக்கப்பட்ட 50 சதவீத காலப்பகுதியை மாத்திரமே கணக்காய்வு உள்ளடக்கியிருந்தது.

## 2.2 கணக்காய்வுத் தெரிவிற்கான காரணங்கள்

விவசாய கால்நடை அபிவிருத்திக் கடன் திட்டத்தின் வினைத்திறனை மதிப்பிடுவதற்கும் திட்டத்தினால் பயன்படுத்தப்பட்ட நிதியங்களின் சிக்கன மற்றும் பயனுறுதியை மதிப்பிடுவதற்காக செயற்பாட்டுக் கணக்காய்வு நிர்ணயத்தின் கீழ் கணக்காய்வை மேற்கொள்வதற்கு விவசாய கால்நடை அபிவிருத்திக் கடன் திட்டம் தேர்ந்தெடுக்கப்பட்டது.

## 2.3 கணக்காய்வின் நோக்கெல்லை

இச் செயற்பாட்டுக் கணக்காய்வு மீயுயர் கணக்காய்வு நிறுவகங்கின் சர்வதேச அமைப்பால் வழங்கப்பட்ட செயற்பாட்டுக் கணக்காய்வு வழிகாட்டிகளின் பிரகாரம் நடாத்தப்பட்டுள்ளது. இந் நியமங்களின் பிரகாரம், கடன் திட்டத்தின் குறிக்கோள்களை அடைந்துகொள்வது, அக் குறிக்கோள்களை அடைந்துகொள்வதுடன் தொடர்பான இடர்களை தீர்மானிப்பது, ஆராய்ந்தறிவதைச் சார்ந்து நிர்ணயங்களும் இதன் மீதான பரிந்துரைகளும் மேற்கொள்ளப்படுவதற்கு ஓர் அடிப்படையாக நிறுவகமும் அதன் செயற்பாடுகளும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகள் தொடர்பாக தேவையான அளவிற்கு கணக்காய்வு அறிவைப் பெற்றுக்கொள்ள வேண்டும். கணக்காய்வு இடரை மதிப்பிடும் விளைவால் கணக்காய்வு செயற்பாடுகளின் தன்மையும் அளவும் வேறுபடும். தேடல்கள் மற்றும் நிர்ணயங்களுக்கு

ஆதாரமான சான்றுகளைச் சேகரித்தல் மற்றும் ஆய்வு செய்தல் என்பவற்றில் எமது நடைமுறைகளும் உள்ளடக்கப்பட்டன. நியாயமான நிர்ணயங்களுக்கு வருவதற்கு இயலுமானவகையில் போதுமானவை என நாம் கருதும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகள் பெற்றுக்கொள்ளப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் செயலாற்றல் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.

## 2.4 கணக்காய்வு நிர்ணயங்கள்

- விவசாய கால்நடை அபிவிருத்திக் கடன் திட்டம் செயற்படுத்தப்பட்ட காலத்தின் போதும் இதற்கு முன்னரும் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதி/ மாவட்டத்தில் நிலவிய வேலைவாய்ப்பு எண்ணிக்கையைக் கணிப்பிடுதல்.

- வழங்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கையையும் 2010 யூன் 30 இல் உள்ளவாறு எய்தப்பட்ட அளவையும் தீர்மானித்தல்.

- பால் கறத்தல், குளிரூட்டல் மற்றும் உணவு பதனீட்டு நடைமுறைகளுக்காக புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தும் நலன் பெறுனர்களின் எண்ணிக்கையை நிர்ணயித்தல்.

- பால் கறத்தல், குளிரூட்டல் முதலியவற்றிற்கான மாட்டுத் தொழுவங்களை நிர்மாணித்து, மாடுகள்/ பசுக்கள் மற்றும் இயந்திரங்களைக் கொள்வனவு செய்த விவசாயிகளின் எண்ணிக்கையை நிர்ணயித்தல்.

- விவசாய கால்நடை அபிவிருத்திக் கடன் திட்டத்தின் அமுலாக்கத்தின் முன்னரும் பின்னரும் உற்பத்தி செய்யப்பட்ட பால் அளவை நிர்ணயித்தல்.

- பங்கேற்பு நிதி நிறுவகங்கள்/ இலங்கை மத்திய வங்கியால் பொதுத் திறைசேரியில் இருந்து கோரப்பட்ட வட்டித் தொகையை நிர்ணயித்தல்.

# 3. விபரமான கணக்காய்வு அவதானிப்புகளும் பரிந்துரைகளும்

## 3.1 பொது அவதானிப்புக்கள்

### 3.1.1 பால் உற்பத்தி தொடர்பான விடயங்கள்

குடிசன, புள்ளிவிபரவியல் திணைக்களத் தகவலின் படி, இலங்கையின் உள்நாட்டு பால் உற்பத்தி அண்மைக்காலமாக அதிகரித்துள்ளது. பால் மா இறக்குமதியும் சிறியளவில் வீழ்ச்சி கண்டுள்ளது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| ஆண்டு | மொத்த வருடாந்த பால் உற்பத்தி | உள்நாட்டு உற்பத்தி | பால் மா இறக்குமதி |
|---|---|---|---|
| | (000 லீற்றர்கள்) | (000 மெ.தொன்) | (000 மெ.தொன்) |
| 2007 | 202,009 | 7.00 | 68.1 |
| 2008 | 208,093 | 7.24 | 61.6 |
| 2009 | 233,316 | 7.53 | 61.51 |

விவசாய கால்நடை அபிவிருத்திக் கடன் திட்டத்திற்கு மேலதிகமாக விவசாய கால்நடை வளப் பிரிவின் உற்பத்தியை விருத்தி செய்வதற்காக பல்வேறு வகையான நிறுவகங்களால் பல நிகழ்ச்சித்திட்டங்கள் அமுலாக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டதிற்கு இணையாக செயற்படுத்தப்பட்டிருந்த கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறாகும்.

- கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம், நாட்டின் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கும் பாற்பண்ணை விவசாயிகளிற்கு உயரிய உற்பத்தி கால் நடைகளை வழங்குவதற்குமாக மாட்டுத்தொழுவ விவசாயிகளின் கிராமங்கள் நிகழ்ச்சித்திட்டத்தை (கிரிகொவி கம்மான) செயற்படுத்தியது.

- வடமேல் மாகாணத்தில் மாட்டுத்தொழுவப் பண்ணைகள் மூலம் சுயதொழில் வேலை வாய்ப்புக்களுக்கான சந்தர்ப்பங்களை அதிகரிப்பதற்காக வடமேல் மாகாண சபையால் கடன் திட்ட முறையொன்று செயற்படுத்தப்பட்டிருந்தது.

- தெங்கு உற்பத்தியாளர்களின் மாட்டுத் தொழுவ நடவடிக்கைகளை ஊக்கப்படுத்தி தென்னந்தோட்டங்களுக்காக சேதனப் பசளைகளை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்தப்படுவதற்காக மாட்டுத் தொழுவங்களை நிர்மாணிக்கும் கிரயத்தை மீளளிப்பதற்கான மானியத் திட்ட முறை ஒன்று தெங்குப் பயிர்செய்கைச் சபையால் குருநாகல், புத்தளம், கம்பஹா மற்றும் மாத்தளை மாவட்டங்களில் 2008 ஆம் ஆண்டின் போது நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது.

பண்ணை உரிமையாளர்களுக்கு திரவப் பால் விற்பனை பாரிய பிரச்சனையாக இருக்கவில்லை. விவசாயிகளின் இதயத்தை வெல்வதற்காக பாரியளவு பால் செயன்முறைப்படுத்தும் கம்பனிகள் போட்டியில் ஈடுபட்டிருந்ததுடன் இதன் விளைவாக விவசாயிகளுக்கு தமது பால் உற்பத்திக்காக நியாய விலையைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தது. அரசுடமையாக்கப்பட்ட மில்கோ நிறுவகம் பசுமாட்டு விவசாயிகளுக்காக சங்கங்களை ஸ்தாபிப்பதற்காக உதவியளித்து விஸ்தரிப்பு சேவைகள், கடன் அடிப்படையில் மாட்டுத் தீன் மற்றும் மருந்துப் பொருட்களை விநியோகித்தல் போன்ற பல்வேறு வசதிகளையும் வழங்கி பெருமளவு வாடிக்கையாளர்களை கம்பனி கொண்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

பல்தேசியக் கம்பனி ஒன்று உட்பட வேறு தனியார் கம்பனிகள் விவசாயிகளைக் கவரும் வகையில் வரையறுக்கப்பட்ட மில்கோ நிறுவகத்தைப் பார்க்கிலும் நெருங்கிய உயர் விலையை வழங்கிய போதிலும் வேறு வசதிகள் வழங்கியிருக்கவில்லை.

**தாக்கங்கள்**

நாட்டின் பால் உற்பத்தி அண்மைய கடந்த காலத்தில் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்த போதிலும் அவ் அதிகரிப்பிற்காக விவசாய கால்நடை அபிவிருத்திக் கடன் திட்டத்தினால் ஏற்படுத்தப்பட்ட தாக்கங்களை நிர்ணயிப்பது சிரமமாக இருந்தது. சமனான கடன் மற்றும் மானிய திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருந்ததுடன் சில அரசாங்க மற்றும் ஏனைய நிறுவகங்கள் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கு பங்களிப்பைச் செலுத்தியிருந்தது. இதன் காரணமாக சமனான மானியங்களை வழங்கும் நிறுவகங்களுக்கிடையே ஒருங்கிணைப்பு இன்மையும் நிகழ்ச்சித்திட்டங்கள்/ திட்டங்கள் தொடர்பான புள்ளிவிபரங்களை ஒரே தடவையில் பெற்றுக்கொள்ளப்படுவதற்கு முடியாமை போன்ற காரணத்தினாலும் நாட்டின் கால்நடை வள அபிவிருத்தி தொடர்பான விவசாய கால்நடை அபிவிருத்திக் கடன்

திட்டத்தினாலான தாக்கங்கள் குறித்து மதிப்பீட்டை மேற்கொள்வது ஆக்கபூர்வமற்றதாகக் காணப்பட்டது.

**பரிந்துரைகள்**

(அ) மாகாண சபைகள் உள்ளடங்கலாக அரச பிரிவின் பல்வேறு நிறுவகங்களினால் நாட்டின் பசு மாட்டுப் பண்ணைகளின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக செயற்படுத்தப்பட்ட ஏனைய நிகழ்ச்சித்திட்டங்களுடன் விவசாய கால்நடை அபிவிருத்திக் கடன் திட்டத்தை தொடர்புபடுத்தல். ஒரே விவசாயிக்கு பல்வேறு நிதிமூலங்களின் மூலமும் பல்வேறு தனி அமைப்புகளினாலும் பசுமாட்டுப் பண்ணைகளுக்காக வழங்கப்பட்ட மானியங்கள் மற்றும் வசதிகளுக்காக செலவிடப்பட்ட கிரயமும் உழைப்பும் சேமிக்கப்படுவதற்கு இதன் மூலம் இயலுமாக இருக்கும்.

(ஆ) மில்கோ கம்பனி உள்ளடங்கலாக பால் விநியோகிக்கும் கம்பனிகளின் கள உத்தியோகத்தர்கள் பால் சேகரிப்பு நடவடிக்கைகளுடன் நேரடியாக தொடர்புபடுவதனால் அவர்களது வாடிக்கையாளர்களுக்கிடையே விவசாய கால்நடை அபிவிருத்திக் கடன் திட்ட நடவடிக்கைகளை விஸ்தரிப்பதற்கு பால் செயற்படுத்தும் கம்பனிகளின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ளல். இது விவசாய கால்நடை அபிவிருத்திக் கடன் திட்டத்தை விரிவான அளவில் பிரபல்யப்படுத்துவதற்காக ஆக்கபூர்வமான பிரசார வழிமுறையாவதுடன் இது உரித்தான சகல தரப்பினரதும் கிரயத்தைக் குறைப்பதற்கும் காரணமாக இருக்கும்.

**முகவரின் பதில் :**

இலங்கை மத்திய வங்கியின் பதிலின் படி, ஆக்கபூர்வமான வகையில் வசதிகளை விஸ்தரிப்பதற்கு விவசாய கால்நடை அபிவிருத்திக் கடன் நடவடிக்கைகள் வேறு நிறுவகங்களுடன் ஒன்றிணைக்கப்படுவதற்கு உடன்பட்டிருந்தது.

ஆரம்ப கட்டத்தில் விவசாய கால்நடை அபிவிருத்திக் கடன் திட்டத்தை விவசாயிகளுக்கிடையே பிரபல்யப்படுத்துவதற்காக மில்கோ நிறுவகத்தின் ஒத்துழைப்பு இலங்கை மத்திய வங்கிக்குக் கிடைக்கப்பெற்றிருந்தது. எவ்வாறெனினும், தற்போது மில்கோ நிறுவகம் தமது அங்கத்தவர்களுக்கும் விவசாயிகளுக்குமிடையே கால்நடை வள அபிவிருத்தி நடவடிக்கைகளை மேம்படுத்துவதுடன் இதன் படி விவசாய கால்நடை அபிவிருத்திக் கடன் திட்டமும் மேம்படுத்தப்படுகின்றது.

### 3.1.2 விவசாய கால்நடை அபிவிருத்திக் கடன் திட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றத்திலான சிக்கல்கள்

விவசாய கால்நடை அபிவிருத்திக் கடன் திட்டத்தின் கீழ் 2008 மார்ச் 01 இலிருந்து செயற்படுத்தப்பட்ட மூன்று ஆண்டு காலப்பகுதிக்குள் செலவிடுவதற்கு பாற் பண்ணை விவசாயிகளுக்காகச் செலவிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட நிதி இலக்கு ரூபா 5,000 மில்லியன் தொகையான போதிலும் 2010 யூன் 30 இல் உள்ளவாறு வழங்கப்பட்டிருந்த மொத்தக் கடனின் அளவு ரூபா 1,072.85 மில்லியன் தொகையாகக் காணப்பட்டது. விவசாய கால்நடை அபிவிருத்திக் கடன் திட்டத்தின் கீழான செலவினம் தொடர்பான விபரங்கள் பின்வருமாறாகும்.

| நோக்கம் | 2010 யூன் 30 வரை | |
|---|---|---|
| | கடன்களின் எண்ணிக்கை | தொகை ரூபா மில். |
| கால்நடை அபிவிருத்தி | 6,765 | 633.91 |
| - அனுமதி பெற்ற வர்த்தக வங்கிகள் | | |
| - அரச மயமாக்கப்பட்டவை | 2,971 | 289.87 |
| தனியார் | 898 | 84.95 |
| - அனுமதி பெற்ற விசேட வங்கிகள் | | |
| - அரச மயமாக்கப்பட்டவை | 2,826 | 252.11 |
| தனியார் | 70 | 6.98 |
| திரவப் பால் செயன்முறை | 197 | 388.79 |
| - அனுமதி பெற்ற வர்த்தக வங்கிகள் | | |
| - அரச மயமாக்கப்பட்டவை | 178 | 360.28 |
| தனியார் | 14 | 25.83 |
| - அனுமதி பெற்ற விசேட வங்கிகள் | | |
| - அரச மயமாக்கப்பட்டவை | 5 | 2.68 |
| தனியார் | எதுவுமில்லை | எதுவுமில்லை |
| விவசாய செயன்முறை | 45 | 50.15 |
| - அனுமதி பெற்ற வர்த்தக வங்கிகள் | | |
| - அரச மயமாக்கப்பட்டவை | 41 | 11.57 |
| தனியார் | 4 | 38.58 |
| - அனுமதி பெற்ற விசேட வங்கிகள் | எதுவுமில்லை | எதுவுமில்லை |
| - அரச மயமாக்கப்பட்டவை | எதுவுமில்லை | எதுவுமில்லை |
| தனியார் | | |

மேற்குறித்த தகவலின் படி, அரசுடமையாக்கப்பட்ட அனுமதி பெற்ற வர்த்தக வங்கிகளும் அனுமதி பெற்ற விசேட வங்கிகளும் கால்நடை அபிவிருத்தி

நோக்கங்களுக்காக சிறிய விவசாயிகளுக்கு கடன் வழங்கியுள்ள அதே வேளை தனியார் அனுமதி பெற்ற வர்த்தக வங்கிகளும் அனுமதி பெற்ற விசேட வங்கிகளும் வர்த்தக அடிப்படையில் திரவப் பால் மற்றும் விவசாய செயன்முறை நோக்கங்களுக்காக கடன்களை வழங்கியிருந்தன.

**தாக்கங்கள்**

நாட்டின் சில மாவட்டங்களில் விவசாய கால்நடை அபிவிருத்திக் கடன் திட்டத்தின் வெற்றி, பங்கேற்பு கடன் நிறுவகங்களின் அர்ப்பணிப்பில் சார்ந்திருந்தது. சில அபிவிருத்தி வங்கிகள் சிறிய அளவில் வியாபாரத்தை நடாத்தும் பசுமாட்டு விவசாயிகளுக்கு தனியான கடன்களை வழங்குவதற்கு விசேட கவனம் செலுத்தியிருந்த அதேவேளை பாரியளவில் விவசாய திட்டச் செயற்திட்டங்களுக்காக கடன் வழங்கப்படுவதற்கு வர்த்தக வங்கிகள் நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தன. திட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியம் ஆக்கபூர்வமான முறையில் பயன்படுத்தப்பட்டிராமை தென்படுவதுடன் 28 மாதங்களில் முதல் ஏழு மாதங்களின் இறுதியில் செலவிடப்பட்ட நிதிய அளவின் மூலம் கால்நடை விவசாயிகளுக்கு திட்டத்தினால் எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் கிடைக்கப்பெறாது போயிருந்தன.

**பரிந்துரைகள்**

கால்நடை அபிவிருத்திச் செயற்பாடுகள் பால்/ விவசாய செயன்முறைப்படுத்தலாக விவசாய கால்நடை அபிவிருத்திக் கடன் நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதியம் முறைப்படியாகச் செலவிடப்படுவதை உறுதிப்படும் வகையில் அக் கடன்கள் முறையே அபிவிருத்தி வங்கி மற்றும் வர்த்தக வங்கிகள் மூலமாக வழங்கப்படுவது ஆக்கபூர்வமானதாகும்.

**முகவரின் பிரதிபலிப்பு**

இலங்கை மத்திய வங்கியின் படி, 2012 யூன் 30 இல் உள்ளவாறான நிலை பின்வருமாறாகும்.

| நோக்கம் | கடன்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை |
|---|---|---|
| | | ரூபா மில் |
| கால்நடை அபிவிருத்தி | 13,686 | 1,688 |
| திரவப் பால் | 451 | 594 |
| செயன்முறைப்படுத்தல் விவசாய செயன்முறை | 56 | 105 |
| மொத்தம் | 14,193 | 2,386 |

இலங்கை மத்திய வங்கியின் படி, கடனாளிகளுக்கே தமது சொந்த வங்கிகளைத் தேர்ந்தெடுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படுவதே முக்கியமான விடயம் என்பதனால் வர்த்தக வங்கிகளுக்கும் அபிவிருத்தி வங்கிகளுக்கும் இடையே செயற்திட்டங்களை வேறுபடுத்துவது சிரமமான விடயமாகக் காணப்பட்டது. அபிவிருத்தி வங்கி மாத்திரம் சிறிய விவசாயிகளுக்கான தேவைப்பாட்டை பூர்த்தி செய்கின்றன எனும் வாதத்தை வலுப்படுத்துவதற்கு திரள் தகவல்கள் பயன்படவில்லை.

### 3.1.3 புதிய வேலை வாய்ப்புக்களின் உருவாக்கமும் புதிய தொழில்நுட்பங்களுக்கு மாற்றமடைதலும்

(அ) ஆரம்ப நிலையில் விவசாய - கால்நடை அபிவிருத்தி கடன் திட்டத்தின் கீழ் புதிய வேலை வாய்ப்புச் சந்தர்ப்பங்கள் தொடர்பான இலக்குகள் குறிப்பிடப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.கடன் திட்டம் தொடர்பான தகவல்களைச் சேகரிப்பதற்காக கள ஆய்வுக் காலப்பகுதியின் போது தரப்படுத்தப்பட்ட ஓர் வினாக்கொத்து அனுப்பிவைக்கப்பட்டிருந்ததுடன் விவசாய மற்றும் கால்நடை அபிவிருத்திக் கடன் திட்டம் பயன்படுத்தப்பட்ட செயற்பாடு தொடர்பான பிரச்சனைகளுக்காக 67 கால்நடை விவசாயிகளில் 61 விவசாயிகள் உரிய கடன் தொகையை வியாபாரத்தை ஆரம்பிப்பதற்காகப் பயன்படுத்தாது நிலவும் வியாபாரத்தை விருத்தி செய்வதற்காகப் பயன்படுத்தியுள்ளதாகப் பதிலளிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் விவசாய கால்நடை அபிவிருத்திக் கடன் திட்டத்தினூடாக புதிய தொழில் வாய்ப்புகள் உருவாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கணக்காய்வுக் கள ஆய்வின் போது பூர்த்தி செய்யப்பட்ட வினாக்கொத்தின் பிரகாரம், நேர்காணப்பட்ட 67 கால்நடை விவசாயிகளில் சாத்திய வள அறிக்கைகள் மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதற்கான உதவியைப் பெற்றுக்கொண்ட விவசாயிகளின் எண்ணிக்கை 44 பேராக மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. மிகுதி விவசாயிகள் வியாபாரத்தை ஆரம்பிப்பதற்கு எவ்வித நிபுணர்களின் உதவியும் பெற்றுக்கொண்டிராத போதிலும் வங்கிக் கடன்களைப் பெற்றுக்கொண்டிருந்தனர். இதன்படி அவர்களது வியாபார நடவடிக்கைகள் ஆக்கபூர்வமாகவும் நிரந்தரமாகவும் செயற்படுவதற்கு இயலுமான அளவில் விவசாயிகளால் புதிய தொழிநுட்பங்கள் பரிமாற்றப்படுவதற்கோ அல்லது இதனைக் கருத்திற் கொள்வதற்கோ முடியாதிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டது.

**தாக்கங்கள்**

விவசாய – கால்நடை அபிவிருத்திக் கடன் திட்டத்தின் வெற்றிக்காக தாக்கமளித்த காரணிகள் புவியியல் வலயத்தின் பிரகாரம் மாற்றமடைந்திருந்தது. வடமத்திய மாகாண விவசாயிகள் உயர் தரத்தில் இனப்பெருக்கி கால்நடைகளைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் வறட்சிக் காலப்பகுதிகளில் தீவன புற்றரைகளைப் பேணல் போன்ற சிக்கல்களுக்கு முகம் கொடுத்திருந்ததுடன் குருநாகல் மாவட்ட விவசாயிகள் புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தும் பண்ணை தொடர்பான சிக்கல்களுக்கு முகம் கொடுத்திருந்தனர். அத்தகைய சிக்கல்களைத் தீர்த்திராமையால் கால்நடை பண்ணை செயற்பாடு, நிரந்தர வருமானத்துடனான மூலமாகக் கருதுவதற்கு விவசாயிகள் முன்வந்திராததுடன் இதன் பிரகாரம் விவசாய – கால்நடை அபிவிருத்திக் கடன் திட்டத்தின் கீழ் கடனைப் பெற்றுக்கொள்வதற்கும் விவசாயிகளை ஊக்குவிப்பது சிரமமாகக் காணப்பட்டது.

**பரிந்துரைகள்**

(அ) விவசாய – கால்நடை அபிவிருத்திக் கடன் திட்டத்தின் செயற்திட்டங்களை அங்கீகரிக்கையில் விவசாய – கால்நடை அபிவிருத்திக் கடன் திட்டத்தின் மூலம் உருவாகும் வேலை வாய்ப்புகள் மற்றும் அவற்றின் நிரந்தரத்தன்மை போன்ற விடயங்கள் தொடர்பாக கவனத்திற்கொள்ள வேண்டும் என பங்கேற்பு நிதி நிறுவகங்களில் கடன் உத்தியோகத்தர்கள்/ ˙கள உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்படல்.

(ஆ) பண்ணை விவசாயிகளுக்கு தொழில்நுட்ப அறிவு பரிமாற்றப்படுவதற்கும் விவசாய – கால்நடை அபிவிருத்திக் கடன் திட்டத்தின் வினைத்திறனை பரிமாற்றுவதற்கும் உதவுமாகையால் விவசாய – கால்நடை அபிவிருத்திக் கடன் திட்டத்திற்காக செயற்திட்டத் தீர்மானங்களைத் தயாரிக்கையில் நிபுணர்களின் உதவியை நாடுவதற்கு விவசாய – கால்நடை அபிவிருத்திக் கடன் திட்ட விண்ணப்பதாரிகள் ஊக்குவிக்கப்படல்.

**முகவரின் பதில்**

இலங்கை மத்திய வங்கி மூலங்களின் படி, உரிய பகுதிகளில் பண்ணை விவசாயிகளுக்கிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தப்படுவற்கு பங்கேற்பு நிதி நிறுவகங்கள் மற்றும் கால்நடை அபிவிருத்தி அமைச்சு ஆகிய இரு நிறுவக உத்தியோகத்தர்களுக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், இலங்கை மத்திய வங்கி இரு தரப்பினருடனும் ஆலோசித்து நாட்டின் தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகளின் குழுக்களுக்கிடையே தொடர் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியிருந்தது.

## 3.2 பங்கேற்புக் கடன் நிறுவகங்களின் செயலாற்றல்

### 3.2.1 வயம்ப அபிவிருத்தி வங்கி (WDB)

வயம்ப அபிவிருத்தி வங்கி குறிப்பாக வடமேல் மாகாணத்திலும் கம்பஹா மாவட்டத்திலும் செயற்பாடுகளை மேற்கொண்டிருந்ததுடன் விவசாய – கால்நடை அபிவிருத்திக் கடன்களின் மீள் அறவீட்டு வீதம் நூற்றுக்கு 98 சதவீதமென திருப்திகரமான மட்டத்தில் நிலவியது.

வயம்ப அபிவிருத்தி வங்கியினால் செயற்படுத்தப்பட்ட விவசாய – கால்நடை அபிவிருத்திக் கடன் திட்டம், அபிவிருத்திக் கடன் திட்ட ஊக்குவிப்பதற்காக கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த செயற்திறனான கள உத்தியோகத்தர்களின் காரணமாக வெற்றியீட்டப்பட்டிருந்தது. இவர்கள் நிதி உதவி தேவைப்படும் சிறிய விவசாயிகளுடன் தொடர்பை ஏற்படுத்தி பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களுடன் நல்லுறவைப் பேணி வந்திருந்தனர். வயம்ப அபிவிருத்தி வங்கி வேறு பிணைகளைப் பெற்றுக்கொள்வதற்குப் பதிலாக பால் உற்பத்திச் சங்க அங்கத்தவர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த சொந்த பிணையில் கடனை வழங்கியிருந்ததுடன் இது கடன் பெறுனர்களுக்கும் இலகுவாக இருந்தது.

வயம்ப அபிவிருத்தி வங்கி முக்கியமாக பசுக்களைக் கொள்வனவு செய்வதற்காக கடன்களை வழங்கியிருந்தமை அவதானிக்கப்பட்டது. பால் செயன்முறைகள் மற்றும் விவசாயத்தைச் சார்ந்த நடவடிக்கைகள் போன்ற விவசாய – கால்நடை அபிவிருத்திக் கடன் திட்டத்தின் ஏனைய நடவடிக்கைகளுக்காக கடன்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

பெரும்பாலான கால்நடை விவசாயிகள் மாட்டுத் தொழுவங்களை உரிய முறையில் நிர்மாணிக்கவோ அல்லது பேணியிருக்கவோ இல்லை. பசுக்களைக் கொள்வனவு செய்வதற்காக கடன்கள் வழங்கப்பட முன் மாட்டுத் தொழுவங்கள் கடனாளிகளால் நிர்மாணிக்கப்பட்டுள்ளதா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு வயம்ப அபிவிருத்தி வங்கியால் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

மாட்டுத் தொழுவங்கள் நிர்மாணிக்கப்படுவதற்காக வழங்கப்பட்ட கடன்கள் குறித்த நோக்கங்களுக்காக விவசாயிகளால் ஆக்கபூர்வமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. வயம்ப அபிவிருத்தி வங்கியின் நித்தம்புவை மற்றும் மீரிகம கிளைகளால் மாட்டுத் தொழுவங்கள்

நிர்மாணிக்கப்படுவதற்காக கடன்கள் வழங்கப்பட்டிருந்த நான்கு விவசாயிகளில் ஒரு விவசாயி மாத்திரமே குறித்த நோக்கத்திற்காக கடன் பணத்தைப் பயன்படுத்தியிருந்தார்.

**தாக்கங்கள்**

(அ) குருநாகல் மற்றும் கம்பஹா மாவட்டங்களில் விவசாய – கால்நடை அபிவிருத்திக் கடன் திட்டத்தின் வெற்றி, பங்கேற்பு நிதி நிறுவகங்களின் அர்ப்பணிப்பைச் சார்ந்திருந்தது.

சிறிய அளவில் வியாபாரத்தை நடாத்தும் தனித்தனியான பண்ணை விவசாயிகளுக்கு தனியாக கடன்களை வழங்குவதற்கு வயம்ப அபிவிருத்தி வங்கி கூடிய கவனத்தை எடுத்திருந்த அதேவேளை பாரியளவான விவசாய செயன்முறைச் செயற்திட்டங்களுக்காக கடன்களை வழங்குவதைக் கருத்திற்கொண்டிருக்கவில்லை.

(ஆ) குருநாகல் மாவட்டத்தின் பால் உற்பத்தியாளர் சங்கங்களின் பங்களிப்பு அதிவிசேடமான நிலையில் காணப்பட்டது. அச் சங்கங்களின் மூலம் மாவட்டத்தின் பங்கேற்பு நிதி நிறுவகங்கள் கடன்களை வழங்கி தவணைப் பணங்களை அறவிட்டிருந்தன.

(இ) வயம்ப அபிவிருத்தி வங்கியின் கள உத்தியோகத்தர்கள் மாட்டுக் கொட்டில்கள் அமைத்தல் மற்றும் சுகாதார நிலையை உறுதிப்படுத்தும் வகையில் பராமரித்தல் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளில் கவனம் செலுத்தப்படுவதற்குப் பதிலாக கடன் வழங்கப்படுவதற்காக முக்கியமான கவனம் எடுக்கப்பட்டிருந்தது. இதன் படி விவசாய – கால்நடை அபிவிருத்திக் கடன் திட்டக் குறிக்கோள்களில் பகுதியளவானவையே எய்தப்பட்டிருந்தன.

**பரிந்துரைகள்**

(அ) பால் செயன்முறைகள் மற்றும் ஏனைய விவசாய விற்பனை நடவடிக்கைகளுக்கான நிதி தேவைப்பாடான கடன் பெறுனர்களுக்கு விவசாய – கால்நடை அபிவிருத்திக் கடன் திட்டத்தின் கீழ் கடன்கள் வழங்கப்படுவதற்கு வயம்ப அபிவிருத்தி வங்கி ஊக்குவிக்கப்பட வேண்டும்.

(ஆ) கடன் பணத்தை விடுவிக்கப்பட முன்னர் அங்கீகரிக்கப்பட்ட தரங்களில் மாட்டுக் கொட்டில்கள் உள்ளமையை பரீட்சிப்பதற்கு கள உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப்படுவதற்கு வயம்ப அபிவிருத்தி வங்கி நடவடிக்கை எடுக்கவேண்டும்.

**முகவரின் பதில்**

இலங்கை மத்திய வங்கியின் பதில்:

இலங்கை மத்திய வங்கியினால் இரு பரிந்துரைகளும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. மேற்குறித்த விடயங்களின் தேவைப்பாடுகள் குறித்து முன்னைய வயம்ப அபிவிருத்தி வங்கியான தற்போதைய பிராந்திய அபிவிருத்தி வங்கியின் கள உத்தியோகத்தர்களுக்கு ஏற்கனவே அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் அவர்கள் மாகாண பண்ணை விவசாயிகளுக்கு ஆக்கபூர்வமான சேவைகளை வழங்கியிருந்தனர். வயம்ப அபிவிருத்தி வங்கி, தற்போதைய பிராந்திய அபிவிருத்தி வங்கியான வயம்ப அபிவிருத்தி வங்கியின் செயற்திறன் தொடர்பாக இலங்கை மத்திய வங்கி திருப்தியடைந்திருந்தது.

### 3.2.2 ரஜரட்ட அபிவிருத்தி வங்கி (RDB)

கள உத்தியோகத்தர்களின் பற்றாக்குறையுடன் ரஜரட்ட அபிவிருத்தி வங்கி இயங்கி வந்தது. இதன் பிரகாரம் விவசாய – கால்நடை அபிவிருத்திக் கடன் திட்டத்தின் கீழ் கண்காணிப்பு நடவடிக்கைகள் திருப்தியற்ற நிலையில் காணப்பட்டது. பெரும்பாலான கால்நடை விவசாயிகள் முறையான வகையில் மாட்டுக் கொட்டில்களை அமைக்கவோ அல்லது பராமரிக்கவோ தவறியிருந்தனர். ரஜரட்ட அபிவிருத்தி வங்கியால் பசுமாடுகள் கொள்வனவு செய்யப்படுவதற்காகக் கடன் வழங்கப்பட முன்னர் கடன்பெறுனர்கள் மாட்டுக் கொட்டில்களை அமைத்துள்ளமையை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக கள உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

கடன் பெறுனர்கள் குறித்த நடவடிக்கைகளுக்காகக் கடன் பணத்தைப் பயன்படுத்தியிருக்கவில்லை. தெரிவுச் செவ்வையில் மூன்றில் ஒரு பங்கினர் கடன் பணத்தை வேறு பணிகளுக்காகப் பயன்படுத்தியிருந்தமை கண்டறியப்பட்டது. எவ்வாறெனினும், அவர்கள் குறித்த நேரத்தில் தவணைப்பணத்தைச் செலுத்தியிருந்தமையால் அவர்களுக்கு எதிராக

எவ்வித நடவடிக்கைகளும் ரஜரட்ட அபிவிருத்தி வங்கியினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**தாக்கங்கள்**

விவசாய – கால்நடை அபிவிருத்திக் கடன் திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதற்காக செயற்படுகையில் ரஜரட்ட அபிவிருத்தி வங்கி வெற்றியடையத்தவறியிருந்தது.

**பரிந்துரைகள்**

(அ) ரஜரட்ட அபிவிருத்தி வங்கி தமது கள உத்தியோகத்தர்களின் ஆளணியை விஸ்தரிப்பதற்காகவும் எதிர்பார்க்கப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவும் விவசாய – கால்நடை அபிவிருத்திக் கடன் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஆ) கடன் பணம் விடுவிக்கப்பட முன்னர் அங்கீகரிக்கப்பட்ட தரங்களில் மாட்டுக் கொட்டில்கள் உள்ளமையைப் பரீட்சிப்பதற்கு கள உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்படுவதற்கு ரஜரட்ட அபிவிருத்தி வங்கி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

முகவரின் பதில்

இலங்கை மத்திய வங்கியின் பதில்:

பரிந்துரைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன் மேலதிக கள உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தும் தேவைப்பாடு ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. ரஜரட்ட அபிவிருத்தி வங்கி உள்ளடங்கலாக அபிவிருத்தி வங்கிகள் ஒருங்கிணைக்கப்பட்டு பிராந்திய அபிவிருத்தி வங்கி உருவாக்கப்பட்டது. விவசாய – கால்நடை வள அபிவிருத்திக் கடன் திட்டத்தின் கீழ் சுட்டிக்காட்டப்பட்ட தேவைப்பாடுகள் மீது அறிவுறுத்தல்கள் வழங்கப்படுவதற்கு ரஜரட்ட அபிவிருத்தி வங்கி அறிவுறுத்தப்பட்டிருந்தது.

### 3.2.3 கந்துரட்ட அபிவிருத்தி வங்கி (KDB)

விவசாய – கால்நடை அபிவிருத்திக் கடன் அறவீட்டு வீதம் 98 சதவீதமான திருப்திகரமான மட்டத்தில் நிலவியது. கந்துரட்ட அபிவிருத்தி வங்கியால் அபிவிருத்திக் கடன் திட்டத்தின் மேம்பாட்டிற்காக செயற்திறனான கள

உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். நிதி உதவி தேவைப்படும் சிறியளவு விவசாயிகளுடன் தொடர்பை வைத்துக் கொள்வதற்கு அவர்களால் இயலுமாக இருந்தது. மேலும், பால் சேகரிப்புச் சங்கங்களுடன் சிறந்த தொடர்பைப் பேணுவதற்கும் கடன் தவணைப்பணங்களை அறவிடுவதற்கும் அவர்களுடன் நல்லுறவைப் பேண முடிந்தது.

எவ்வாறாயினும், கந்துரட்ட அபிவிருத்தி வங்கி கிளையில் கடன் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த 1,208 விவசாயிகளில் 2010 செப்தெம்பர் 8 இல் உள்ளவாறு 610 விவசாயிகள் மாத்திரமே கடன்களைப் பெற்றிருந்தனர்.

**தாக்கங்கள்**

கண்டி மாவட்டத்தில் விவசாய – கால்நடை அபிவிருத்திக் கடன் திட்டத்தின் வெற்றிக்கு கள உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட அர்ப்பணிப்பே காரணமாக இருந்தது. கந்துரட்ட அபிவிருத்தி வங்கியால் சிறியளவில் வியாபாரங்களை நடாத்தும் தனித்தனியான பாற்பண்ணை விவசாயிகளுக்காக தனியாக கடனை வழங்குவதற்கு கூடிய கவனம் செலுத்தியிருந்த அதே வேளை பாரியளவில் பால் செயன்முறைச் செயற்திட்டம் ஒன்றிற்கு மாத்திரமே அது கடனை வழங்கியிருந்தது. ஆகவே விவசாய – கால்நடை அபிவிருத்திக் கடன் திட்டத்தின் குறிக்கோள்கள் முழுமையாக எய்தப்பட்டிருக்கவில்லை.

**பரிந்துரை**

பிரதேசத்தின் பால் செயன்முறைப்படுத்தல் செயற்திட்டங்களுக்காக விவசாய – கால்நடை அபிவிருத்திக் கடன் திட்டத்தை விரிவுபடுத்தலுக்கு கந்துரட்ட அபிவிருத்தி வங்கி ஊக்குவிக்கப்பட வேண்டும்.

**முகவரின் பதில்**

இலங்கை மத்திய வங்கியின் பதில் :-

கந்துரட்ட அபிவிருத்தி வங்கியான (தற்போதைய பிரதேச அபிவிருத்தி வங்கியின்) கள உத்தியோகத்தர்களால் திட்டத்தை பிரபல்யப்படுத்துவதற்காகவும் அத்

திட்டங்களின் கீழ் கூடிய வசதிகளை வழங்குவதற்கும் பாரிய உழைப்பை எடுத்திருந்ததாக இலங்கை மத்திய வங்கியும் அவதானித்திருந்தது.

### 3.2.4 இலங்கை வங்கி (BOC)

கடன் நோக்கங்களுக்காக இலங்கை வங்கியால் காப்புறுதியைப் பெற்றுக்கொள்வதற்கு விவசாய மற்றும் கமநல காப்புறுதிச் சபையுடன் ஓர் புரிந்துணர்வு உடன்படிக்கையை மேற்கொண்டிருந்தது. இருப்பினும் காப்புறுதியாளரால் இறந்த விலங்குகளுக்கான காப்புறுதி நட்டஈடு செலுத்தப்படாமையால் கடன் தவணைப்பணக் கொடுப்பனவின் போது நாம் சிக்கல்களுக்கு முகம் கொடுப்பதாக கடனாளிகள் குற்றம் சாட்டியிருந்தனர்

பசுக்களின் கொள்வனவிற்காக கடன்களை அங்கீகரிக்கையில் உள்ள மாட்டுக் கொட்டில்கள் தொடர்பில் கருத்தில் கொள்ளப்படவில்லை. நாரம்மல மற்றும் வீரம்புகெதர பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வுகளின் போது பெரும்பாலான பசுக் கொட்டில்கள் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட தரங்களுக்கு இணங்கியிராமை கண்டறியப்பட்டது.

தம்புத்தேகம இலங்கை வங்கிக் கிளையால் நலகந்தேகம கிராமத்தில் வாழும் கடன் பெறுனர்களுக்கு மாத்திரமே கடன்கள் வழங்கப்பட்டிருந்தன.

எப்பாவெலவில் உள்ள இலங்கை வங்கிக் கிளை கடன்களை வழங்குவதிலும் வருமதிகளை அறவிடுவதிலும் வெற்றி பெற்றிருந்தது. எப்பாவெல பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் சங்கத்தினூடாக வெற்றிகரமாக அறவிடப்பட்டிருந்தது.

மீளாய்வாண்டில் கம்பஹா மாவட்ட இலங்கை வங்கிக் கிளைகளால் மீளாய்வுக் காலத்தின் போது விவசாய – கால்நடை அபிவிருத்திக் கடன் முறைமையின் கீழ் எவ்வித கடனும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

**தாக்கங்கள்**

(அ) அநுராதபுர மாவட்டத்தில் பால் உற்பத்தியாளர் சங்கங்களின் பங்களிப்பு குறிப்பாக சாதக நிலையில் காணப்பட்டது. மாவட்டத்தில் இருந்த இலங்கை வங்கிக் கிளைகள் சங்கங்களினூடகவே கடன்களை வழங்கி தவணைப் பணங்களையும் அறவிட்டிருந்தது.

(ஆ) காப்புறுதி நட்டஈடுகளின் பெறுவனவு தாமதமடையும் காரணத்தினால் கடன் பெறுனர்கள் திருப்தியற்றும் தைரியமற்றும் காணப்பட்டனர்.

(இ) சில இலங்கை வங்கிக் கிளைகளில் முன்னேற்றத்தில் மந்த நிலை காணப்பட்டது.

**பரிந்துரை**

(அ) பால் சேகரிப்பு சங்கங்கள் / பால் உற்பத்தியாளர்களுக்கான கூட்டுறவு சங்கங்களினூடாக கடன் கண்காணிப்பும் தவணைப் பணங்களின் அறவீடும் மிகச் செயற்திறனாகக் காணப்பட்டமையால் இதன் மூலம் விவசாய – கால்நடை வள அபிவிருத்திக் கடன் திட்டத்தின் கீழ் கடன் பெறுனர்களுக்கு கடன் வழங்கப்படுவதற்கு இலங்கை வங்கிக் கிளைகள் மேலும் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

(ஆ) கடன்கள் பெறுனர்களின் சட்டரீதியான கோரல்களுக்கு மதிப்பளிப்பதற்கு காப்புறுதியாளருக்கு முடிந்திராமை விவசாய – கால்நடை அபிவிருத்திக் கடன் திட்டத்தின் கீழ் கடனைப் பெறுகையில் விவசாயிகளை அதைரியமடையச் செய்த காரணியானமையால் விவசாய மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையுடன் ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை நிபந்தனைகள் திருத்தம் செய்யப்படுவதைக் கருத்திற்கொள்ளப்படுவது கடன் பெறுனர்களுக்கு பயன்படக் கூடும்.

**முகவரின் பதில்**

இலங்கை மத்திய வங்கியின் பிரதிபலிப்பு :-

இலங்கை வங்கிக் கிளைகளின் செயற்திறன் திருப்திகரமாகக் காணப்பட்டதுடன் விவசாய – கால்நடை அபிவிருத்திக் கடன் திட்டத்தின் கீழ் கிளை மட்டத்தில் மேலும் ஊக்கப்படுத்துவது அவசியமானதாகும். (ஆ) பரிந்துரை ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

### 3.2.5 மக்கள் வங்கி

மக்கள் வங்கியால் வழங்கிய கடன்களுக்காக காப்புறுதி பெற்றுக்கொள்ளப்படுவதற்காக விவசாய மற்றும் கமநலக் காப்புறுதி சபையுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையை ஏற்படுத்தியிருந்தது. எவ்வாறெனினும், இறந்த விலங்குகளுக்காக காப்புறுதிப் பணம் பெறப்பட்டிருக்கவில்லை என கடன் பெறுனர்களில் பலர் முறைப்பாடுகளைச் செய்திருந்ததுடன் கடன் தவணைப் பணங்களைச் செலுத்துவதிலும் அவர்கள் சிக்கல்களை எதிர்நோக்கியிருந்தனர்.

சில கிளைகள் தமது செயற்பாட்டு வலயங்களில் விவசாய – கால்நடை அபிவிருத்திக் கடன் திட்டத்தை விஸ்தரிப்பதற்கு ஆக்கபூர்வமான முயற்சிகளை எடுத்திருக்கவில்லை. நாரம்மல கிளை ஒரு கடனுக்காக மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதை எடுத்துக்காட்டாகக் காட்டமுடியும்.

தவுலாகல கிளையில் ஏழு கடன் பெறுனர்களிடம் இருந்து பெறப்பட்ட கடன்கள் மீது 12 சதவீத வட்டிக்குப் பதிலாக 14 சதவீத வட்டி அறவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. கடன் வட்டி 8 சதவீதமாக மாற்றப்பட்டிருந்த போதிலும் மக்கள் வங்கித் தலைமை அலுவலகத்திலிருந்து கிளை முகாமையாளர்களுக்கு தெளிவற்ற அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதன் விளைவாக அந்த வட்டி வீதம் கிளைகளால் அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

மக்கள் வங்கியால் கம்பஹா மாவட்டத்தில் விவசாய – கால்நடை அபிவிருத்திக் கடன் திட்டம் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2010 ஒக்டோபர் மாதத்தின் போது மீரிகம கிளை ஏழு கடன்களை வழங்குவதற்கு பணம் செலுத்தியிருந்தது.

**தாக்கங்கள்**

(அ) காப்புறுதியாளரால் காப்புறுதிக் கோரல்கள் தீர்க்கப்படுவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக கடன்பெறுனர்கள் திருப்தியின்றியும் ஊக்கமற்றும் காணப்பட்டனர்.

(ஆ) விவசாய – கால்நடை அபிவிருத்திக் கடன் திட்டத்தின் நடவடிக்கைகளுக்காக மக்கள் வங்கியின் சில கிளைகளால் கடன்கள் வழங்கப்படுகையில் மெதுவான முன்னேற்றம் காணப்பட்டது.

**பரிந்துரைகள்**

(அ) கடன் பெறுனர்களின் சட்டபூர்வமான கோரல்களுக்கு மதிப்பளிப்பதற்கு காப்புறுதியாளருக்கு முடியாதிருந்தமை, விவசாய – கால்நடை அபிவிருத்திக் கடன் திட்டத்தின் கீழ் கடன் பெறப்படுகையில் விவசாயிகளை ஊக்கப்படுத்தாத காரணியானமையால் விவசாய மற்றும் கலநல காப்புறுதிச் சபையுடன் ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் நிபந்தனைகளை மாற்றுவதை கருத்திற்கொள்வது கடனாளிகளுக்குப் பயனளிக்கக் கூடியதாகும்.

(ஆ) இலங்கை மத்திய வங்கியின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் 8 சதவீதமாக வரையில் வட்டி வீதத்தை மாற்றுவதற்கு மக்கள் வங்கி உடனடி நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

**முகவரின் பதில்**

இலங்கை மத்திய வங்கி பதில் :

பரிந்துரை (அ) ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட செயற்பாட்டு அறிவுறுத்தல்களின் படி மேற்குறிப்பிடப்பட்ட (ஆ) இல் குறிப்பிடப்பட்ட வட்டி வீதத்தை அமுலாக்குவதற்கு மக்கள் வங்கிக்கு ஏற்கனவே அறிவுறுத்தல்களை வழங்கியிருந்தது.

## 3.3 கண்காணிப்பு முகவர்களின் நடவடிக்கைகள் மீதான அவதானிப்புகள்

### 3.3.1 நிதி திட்டமிடல் அமைச்சு

விவசாய – கால்நடை அபிவிருத்திக் கடன் திட்டத்தின் செயற்பாட்டு அறிவுறுத்தலின் பிரகாரம், பங்கேற்பு நிதி நிறுவகங்களுக்கு உரிய நேரத்தில் வட்டிக் கொடுப்பனவு செய்வது நிதி, திட்டமிடல் அமைச்சின் முக்கிய பணியாகும். கடந்த 04 அரை ஆண்டுகளுக்காக மேற்கொள்ளப்பட்ட வட்டி மானியக் கொடுப்பனவுகள் மற்றும் திகதிகள் பற்றிய விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| **காலம்** | **மானிய வட்டித் தொகை** | **கொடுப்பனவுத் திகதி** |
|---|---|---|
| | **ரூபா** | |
| 2008 திசெம்பர் 31 இல் முடிவுற்ற அரையாண்டு | 1,385,150 | 2009 செப்தெம்பர் 7 |
| 2009 யூன் 30 இல் முடிவுற்ற அரையாண்டு | 10,174,178 | 2010 ஒக்டோபர் 02 |
| 2009 திசெம்பர் 31 இல் முடிவுற்ற அரையாண்டு | 17,352,353 | 2010 யூலை 23 |
| 2010 யூன் 30 இல் முடிவுற்ற அரையாண்டு | நிர்ணயிக்கப்ப டவில்லை | செலுத்தப்படவில்லை. |

இதற்கு மேலதிகமாக, விவசாய – கால்நடை அபிவிருத்திக் கடன் திட்டத்தின் கண்காணிப்பு நடைமுறையின் ஓர் பகுதியாக கள ஆய்வுகள் எதனையும் நிதி, திட்டமிடல் அமைச்சு உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**தாக்கங்கள்**

(அ) வட்டிக் கிரய மீளளிப்பின் தாமதங்கள் காரணமாக சிறியளவிலான பங்கேற்பு நிதி நிறுவகங்கள் அதைரியத்திற்கு உட்பட்டிருக்கக் கூடும்.

(ஆ) ஆகக் குறைந்தது எழுந்தமான முறையிலேனும் கள ஆய்வுகளை நிதி திட்டமிடல் அமைச்சு உத்தியோகத்தர்கள் மேற்கொள்ளாது விட்டமையால் விவசாய – கால்நடை அபிவிருத்திக் கடன் திட்டத்தின் உள்ளபடியான முன்னேற்றத்தை இவற்றில் மதிப்பிட இயலாது போயிருக்கும்.

**பரிந்துரைகள்**

(அ) நிதி திட்டமிடல் அமைசசினால் விவசாய – கால்நடை அபிவிருத்திக் கடன் திட்டத்தின் கடன்களைப் பதிவு செய்து அவற்றின் மீதான வட்டி மானிய மீளளிப்பை விரைவுபடுத்தல் வேண்டும்.

(ஆ) நிதி திட்டமிடல் அமைச்சு உத்தியோகத்தர்கள் கள ஆய்வுகளில் ஈடுபடுத்தப்பட வேண்டும்.

**முகவரின் பதில்:**

நிதி திட்டமிடல் அமைச்சின் பதில் :

இலங்கை மத்திய வங்கியினால் வட்டி மானியம் கணிக்கப்பட்டு இலங்கை மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட கோரல்களை அடிப்படையாகக் கொண்டு எமது திணைக்களத்தால் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆகவே ஆரம்பத்தில் இலங்கை மத்திய வங்கியிடமிருந்து பெறப்பட்ட கோரல்களின் திகதியிலிருந்து ஒன்று தொடக்கம் மூன்று மாதங்கள் வரை கோரல்கள் தீர்க்கப்படுவதற்காக எடுக்கப்பட்டது. தற்போது, மானியக் கொடுப்பனவுகளின் நடைமுறையை விரைவுபடுத்துவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் காரணமாக கொடுப்பனவுகள் சராசரியாக ஒரு மாதத்திற்குள் மேற்கொள்ளப்படுகின்றன.

மேலும், இலங்கை மத்திய வங்கியினால் கோரல்களைத் தயாரிப்பதற்காக எடுக்கப்பட்ட காலமும் எட்டு மாதங்களில் இருந்து ஏறத்தாழ மூன்று மாதங்கள் வரை குறைக்கப்பட்டிருந்தது. காசுப்பாய்ச்சல் சிக்கலினாலும் கோரல்களின் கொடுப்பனவு நடைமுறைகள் மற்றும் தயாரிப்புகளில் தவிர்க்கமுடியாத தொடர் தாமதங்கள் காரணமாக திறைசேரியின் செயற்பாட்டுத் திணைக்களப் பிரிவினால் முன்னுரிமை அடிப்படையில் நிதிகள் விடுவிக்கப்படுவதனாலும் மேலும் இக் கொடுப்பனவுகளைத் துரிதப்படுத்த இயலாதிருந்தது. அவசியம் ஏற்படுகையில் பங்கேற்பு நிதி நிறுவகங்களுடன் அபிவிருத்தி நிதித் திணைக்கள ஒருங்கிணைப்புடன் களப்பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. எவ்வாறெனினும், நிதி நேரம் மற்றும் மனிதவள மூலதன வரையறைகள் காரணமாக செயற்திட்டத்தின் மொத்த பகுதிகளையும் உள்ளடக்கும் வகையில் கள ஆய்வுகளை மேற்கொள்ள முடியாதிருந்தது.

### 3.3.2 கால்நடை அபிவிருத்தி அமைச்சு(MOLD)

கால்நடை அபிவிருத்தி அமைச்சு, விவசாய – கால்நடை அபிவிருத்திக் கடன் திட்டத்திற்கான தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதற்கு இலங்கை மத்திய வங்கியுடன் உடன்பட்டிருந்த போதிலும், அடித்தள மட்டத்தில் கால்நடை அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடும் கால்நடை மருத்துவர்களையும் கால்நடை வள அபிவிருத்தி உத்தியோகத்தர்களையும் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களமும் மாகாண சபைகளும் நேரடியாக நிர்வகிக்கின்றன. ஆகவே அந் நிறுவகங்களால் செயற்படுத்தப்படும் பல்வேறு அபிவிருத்திச் செயற்திட்டங்களுடன் தொடர்புபடும் உத்தியோகத்தர்கள் அந்த மூன்று நிறுவகங்களாலும் வழங்கப்படும் அறிவுறுத்தல்களைக் கடைப்பிடிக்க வேண்டும். இதன் பிரகாரம் கடனுக்குக் கொள்வனவு செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் பசுக்களிற்கு தேவையான சுகாதாரத்தை உறுதிப்படுத்துவதற்காக உத்தியோகத்தர்களால் குறைவான கவனமே எடுக்கப்பட்டிருந்தது.

கம்பஹா மாவட்டத்தைத் தவிர ஏனைய பகுதிகளில் விவசாய – கால்நடை வள அபிவிருத்திக் கடன் திட்ட நடவடிக்கைகளுக்காக கால்நடை வள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் போதிய பங்களிப்பைச் செய்திராமை கண்டறியப்பட்டது. கள ஆய்வின் போது பேட்டி காணப்பட்ட குருநாகல், அநுராதபுரம் மற்றும் கண்டி மாவட்டங்களில் வாழும் 60 விவசாயிகளில் 49 விவசாயிகளும் விவசாய – கால்நடை அபிவிருத்திக் கடன் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக தமது வளவுகளிற்கு கால்நடை வள உத்தியோகத்தர்கள் வருகை தருவதில்லை என்றே குறிப்பிட்டிருந்தனர். கால்நடை வள உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட விளக்கத்தின் படி, தமது செயற்பாட்டு பகுதி மிகப் பரந்தளவில் காணப்படுவதாகவும் இதனால் திடீர் அழைப்புக் கடமைகளில் சமுகமளிப்பதேயன்றி கிரமமாகச் சென்று கால்நடை விவசாயிகளின் வளவுகளைப் பார்வையிடுவது கடினமாக இருந்தது.

பால் பண்ணை விவசாயிகளால் தெரிவிக்கப்பட்ட கருத்துப் படி தலா ஒரு வருகைக்கு ரூபா 300 படி செயற்கையாகப் பண்பூட்டப்பட்ட நோக்கங்களுக்கான கால்நடை பண்ணைகளுக்கான வருகைக்காக மைலேஜ் கிரயத்தை கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அறவிட்டிருந்தனர். பெறப்பட்ட தகவலின் படி, விவசாயிகளிடமிருந்து மைலுக்கான கிரயத்தை அறவிடுவதற்கு கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு அனுமதியளித்துள்ளது.

அமுலாக்கம்

(அ) சில பகுதிகளில் பண்ணை விவசாயிகளின் விவசாயப் பழக்கவழக்கங்கள் மாற்றமடைந்திராமை அவதானிக்கப்பட்டது. கள ஆய்வின் போது பேட்டிகாணப்பட்ட 67 கால்நடை விவசாயிகளில் 60 விவசாயிகள் போதிய தொழில்நுட்பப் பின்னணியின்றி தமது விவசாய நடவடிக்கைகளைத் தாமே செயற்படுத்துவதாகக் குறிப்பிட்டிருந்தனர். ஆகவே, உள்ளூர் கால்நடை விவசாயிகளுக்கு சமனாக தொழில்நுட்ப அறிவு பரிமாற்றப்பட்டிருக்கவில்லை. எடுத்துக்காட்டாக, உலர் வலயங்களில் வாழும் விவசாயிகள் பசுக்களுக்கு கொட்டில்களில் உணவு வழங்குவதற்கு பழக்கமற்றவர்கள். உயர் விளைவைப் பெறுவதை உறுதிப்படுத்துவதற்கு கொட்டில்களில் பசுக்களை வைத்திருப்பதிலான நன்மைகள் தொடர்பான சேவைகளை விரிவுபடுத்துவதில் ஈடுபடும் உத்தியோகத்தர்களால் போதிய அறிவூட்டப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. விவசாய – கால்நடை அபிவிருத்தி கடன் நடவடிக்கைகளை நடாத்துவதற்கு விஸ்தரிப்பு உத்தியோகத்தர்கள் ஓர் அறிவுறுத்தல் வழிமுறையைக் கொண்டிருக்க வேண்டும்.

(ஆ) விவசாய – கால்நடை அபிவிருத்தி கடன் முறைமையின் வெற்றிக்கு ஓர் அடிமட்டத்தில் பண்ணை விவசாயிகளுக்கான விஸ்தரிப்பு சேவைகள் கட்டாய காரணியாகக் காணப்பட்டது. விஸ்தரிப்பு சேவைகளுக்கான மனிதவளப் பற்றாக்குறை மற்றும் நிவாகப் பிரச்சனைகள் காரணமாக விவசாய – கால்நடை அபிவிருத்தி கடன் நடவடிக்கைகள் மீது MOLD இன் கீழான நிறுவகங்களால் வழங்கப்பட்ட விஸ்தரிப்பு சேவைகள் மூலம் பாரிய கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. எவ்வாறெனினும் விவசாய – கால்நடை அபிவிருத்தி கடன் நடவடிக்கைகள் மீது கம்பஹா மாவட்ட விஸ்தரிப்பு உத்தியோகத்தர்களின் பங்களிப்பு வழமைக்கு மாறான முறையில் சிறப்பாகக் காணப்பட்டது.

(இ) கால்நடை விவசாயிகளுக்கு சிறந்த விஸ்தரிப்பு சேவையை வழங்குவதற்காக ஒவ்வொரு உத்தியோகத்தருக்கான செயற்பாட்டு பகுதி நியாயமாக நிர்ணயிக்கப்பட வேண்டும்.

**பரிந்துரைகள்**

(அ) அடிமட்டத்தில் செயற்படும் உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்களின் போக்கையும் ஆதரவு நிறுவகங்களின் நிறுவகக் கட்டமைப்பையும் மீள்பரிசீலனை செய்வதற்கு MOLD நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஆ) பண்ணை விவசாயிகளுக்கான மேலதிக சுமையான அழைப்புக் கடமைகளின் போது பண்ணை விவசாயிகளிடமிருந்து LDO ஆல் அறவிடப்படும் மைல் கட்டணத் தொகையை நிர்ணயிப்பதற்கு MOLD நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

**முகவரின் பதில்** : MOLD இன் பதில் கிடைத்திருக்கவில்லை.

### 3.3.3 இலங்கை மத்திய வங்கி

கால்நடை அபிவிருத்தி நடவடிக்கைகளில் மும்முரமாக ஈடுபடும் கால்நடை அபிவிருத்தி அமைச்சின் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக இரண்டு ஆண்டு காலத்திற்கான ஓர் கொள்கை ஊக்குவிப்பு நிதியத்தை (PSF) இலங்கை மத்திய வங்கி ஸ்தாபித்திருந்தது. கொள்கை ஊக்குவிப்பு நிதியத்தின் கீழ் கால் நடை அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவை மேற்கொள்வதற்கான பிரதான நிர்ணயமாக கடன் வசதிகளைப் பெறுவதற்காக விவசாயிகளை கடன் வசதிகள் நிறுவகங்ளுக்கு அறிமுகப்படுத்துவதாகும். எவ்வாறெனினும் 2009 இல் விவசாய – கால்நடை அபிவிருத்திக் கடன் திட்ட நடவடிக்கைகளின் செயற்திறனுக்காக 2009 ஆம் ஆண்டின் போது ஊக்குவிப்பு வழங்கப்பட்ட 84 கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர்களில் 61 கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கொள்கை ஊக்குவிப்பு நிதியக் கிளைகளுக்கு எந்த ஒரு விவசாயியையும் அறிமுகப்படுத்தியிருக்கவில்லை.

இலங்கை மத்திய வய்கியினால் அறிமுகப்படுத்தப்பட்ட செயற்பாட்டு அறிவுறுத்தல்களின் படி விவசாயிகளுக்கு கடன்கள் விடுவிக்கப்பட முன்னர் பிராந்திய அபிவிருத்தி திணைக்களத்தில் அக் கடன்கள் பதிவு செய்யப்பட வேண்டும். எவ்வாறெனினும், பிராந்திய அபிவிருத்தி திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் பதிவு செய்யப்பட்ட

கடன் எண்ணிக்கையைப் பார்க்கிலும் நிதியகள் செலவிட்ட கடன் எண்ணிக்கை அதிகரித்திருந்தமை இலங்கை மத்திய வங்கியில் பதியப்படாது கடன் தொகை செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. பெற்றுக்கொள்ளப்பட்ட தகவலின் படி சில பங்கேற்பு நிறுவகங்கள் தொகை செலுத்தப்பட்டதை அடுத்து உரிய கடன்கள் இலங்கை மத்திய வங்கியின் விவசாய – கால் நடை அபிவிருத்தி கடனாக பதிவு செய்யப்பட்டிருந்தது..

குறித்த சில அபிவிருத்தி வங்கிகளால் ஈடுபடுத்தப்பட்ட கள உத்தியோகத்தர்கள் தமது சேவைப்பகுதிகளில் குறிப்பாக குருநாகல் மாவட்டத்தில் விவசாய – கால்நடை அபிவிருத்தி கடன் நடவடிக்கைகளின் வெற்றிக்கு சாதகமான பங்களிப்பை மேற்கொண்டுள்ளனர். கள ஆய்வுகளின் போது அக் கள உத்தியோகத்தர்கள் கிரமமாக விவசாயிகளைச் சந்தித்து கால்நடை விவசாயத்தைத் தொடர்வதற்கு ஊக்குவித்திருந்தமையும் வங்கியுடன் சிறந்த தொடர்பை ஏற்படுத்தியிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

**தாக்கங்கள்**

(அ) செயற்திட்ட உத்தியோகத்தர்களை ஊக்குவிப்பதற்காக இலங்கை மத்திய வங்கியால் ஸ்தாபிக்கப்பட்ட கொள்கை ஊக்குவிப்பு நிதியம், விவசாய – கால் நடை வள அபிவிருத்தி கடன் நடவடிக்கைகளை விருத்தி செய்வதற்கு ஒட்டுமொத்தமான ஆக்கபூர்வமான செயற்பாடாக இருக்கவில்லை.

(ஆ) விவசாய – கால் நடை அபிவிருத்தி கடன் திட்டத்திற்கு இணையான நுண்பாக நிதி நடவடிக்கைகளின் வெற்றிக்கு கள உத்தியோகத்தர்களின் சேவைத் தேவைப்பாடு காரணியாக அமைவதுடன் இதன் பிரகாரம் அவர்களுக்கான நலனை வழங்குவதற்கு முறையான நடைமுறை ஒன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்காவிட்டால் அது திட்டத்தின் நலிவான ஈடுபாட்டை பிரதிபலக்கும்.

(இ) பங்கேற்பு நிதி நிறுவகங்களால் விவசாய – கால்நடை வள அபிவிருத்தி கடன் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்கள் பதிவு செய்யப்படாமையால் இலங்கை மத்திய வங்கியின் கண்காணிப்பு ஆக்கபூர்வமானதாக அமையவில்லை.

**பரிந்துரைகள்**

(அ) நலன் திட்டம், பங்கேற்புக் கடன் நிறுவகங்களின் கள உத்தியோகத்தர்களுக்கும் நீடிக்கப்பட வேண்டியதுடன் நிர்ணயங்கள் பூர்த்தியடைந்த மாத்திரத்தில் நலன்கள் பெறப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு இயலுமான வகையில் கட்டுப்படுத்த வேண்டும்.

(ஆ) பங்கேற்புக் கடன் நிறுவகங்கள் அறிவுறுத்தல்களுக்கு இணங்கச் செயற்பட வேண்டியதுடன் விவசாய – கால் நடை அபிவிருத்தி கடன் திட்டத்தின் கீழ் கடன்கள் வழங்கப்பட முன்னர் அவை நிதி திட்டமிடல் அமைச்சிடமிருந்து வட்டி மானியத்தைப் பெறுவதற்கு உரித்துப் பெறுவதற்கு ஏதுவான வகையில் கடன்கள் பதிவு செய்யப்படுவது உறுதிப்படுத்தப்படுவதற்கு இலங்கை மத்திய வங்கி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**முகவரின் பதில்**

மேற்படி பரிந்துரைகளுக்கு இலங்கை மத்திய வங்கி பதிலளித்திருக்கவில்லை.

## 4. கணக்காய்வு முடிவுகள்

விவசாய – கால்நடை அபிவிருத்தி கடன் திட்டம், 2008 பாதீட்டின் மூலம் பரிந்துரைக்கப்பட்ட பிரதான நிகழ்ச்சித்திட்டமானதுடன் உள்ளூர் பால் உற்பத்தியை மேம்படுத்துவதற்காக அரச மற்றும் தனியார் துறையின் பல நிறுவகங்களின் பங்கேற்புடன் அமுலாக்கப்பட்டது. அதிகளவு வேலைவாய்ப்புகளை வழங்குவதற்கும் பால் மா இறக்குமதியில் அதிகரிக்கும் அன்னிய செலாவணியைச் சேமிப்பதற்கும் ஏதுவான வகையில் நாட்டில் திரவப் பால் உற்பத்தியை அதிகரிக்கும் எதிர்பார்ப்புடன் அரசாங்கம் ரூபா 5,000 மில்லியனை நிகழ்ச்சித்திட்டத்திற்காக ஒதுக்கியிருந்தது.

எவ்வாறெனினும், தேசிய மற்றும் பிராந்திய மட்டத்தில் ஏனைய பல்வேறு நிறுவகங்களால் செயற்படுத்தப்பட்ட ஏனைய இத்தகைய செயற்திட்டங்கள் காரணமாக நாட்டின் திரவப் பால் உற்பத்தியை மேம்படுத்துவதற்கு விவசாய – கால்நடை அபிவிருத்தி கடன் திட்டம் செயற்படுத்தப்பட்டதனலான தாக்கத்தை நிச்சயிக்கும் வகையில் நிர்ணயிக்க கணக்காய்வின் போது முடியாதிருந்தது.

பங்கேற்பு நிதி நிறுவகங்கள் சிலவற்றினால் சில மாவட்டங்களில் விவசாய – கால்நடை அபிவிருத்தி கடன் திட்டம் முறையான வகையில் செயற்படுத்தப்பட்டிருந்ததுடன் ஏனைய பங்கேற்பு நிதி நிறுவகங்களால் வேறு சில மாவட்டங்களில் விவசாய – கால்நடை அபிவிருத்தி கடன் திட்டத்தின் குறிக்கோள்கள் எய்தப்பட்டிருக்கவில்லை. இலங்கையின் பல்வேறு பகுதிகளில் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் முறைப்படி தீர்க்கப்படக் கூடிய வகையில் ஆரம்ப கட்டத்திலேயே இனங்காணப்பட்டிருக்கவில்லை. பங்கேற்பு நிதி நிறுவகங்கள் சிலவற்றினால் வேலைக்கமர்த்தப்பட்டிருந்த உத்தியோகத்தர்கள் சிறந்த வினைத்திறனுடன் நடவடிக்கை எடுத்திருந்ததுடன் திருப்திகரமான முறையில் இலக்குகள் எய்தப்பட்டிருந்தன.

முடிவாக, பிராந்திய மட்டத்தில் உண்மையான பிரச்சினைகளைப் புரிந்து கொள்வதற்கு சந்தர்ப்பங்களை வழங்கி கால்நடைத் துறையில் சகல நிறுவகங்களையும் ஒருங்கிணைப்பதற்காகவும் விவசாய – கால்நடை வள அபிவிருத்தி கடன் திட்டச் செயற்பாட்டை, செயற்படுத்துவதில் ஈடுபடும் உத்தியோகத்தர்களின் அனுபவத்தைப் பகிர்ந்து கொள்வதற்காகவும் முறையான பொறிமுறை ஒன்று ஸ்தாபிக்கப்பட வேண்டும். மேலும், அடி மட்டத்தில் செயற்படும் பல நிறுவன உத்தியோகத்தர்கள் இலக்குகளை எய்துகையில் மேலதிக நிதி நலன்களை வழங்குவதன் மூலம் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

## இணைப்பு – 01

**விவசாய – கால்நடை அபிவிருத்தி கடன் திட்டம் பற்றியவை**

**விவசாய – கால்நடை அபிவிருத்தி கடன் திட்டத்தின் நோக்கங்கள்**

(அ) சிறிய விவசாயிகளுக்கு பசுக்களைக் கொள்வனவு செய்வதற்கும், விவசாய மற்றும் குளிரூட்டல் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கும், அவர்களது வருமானத்தை மேம்படுத்துவதற்காகவும் மாட்டுக் கொட்டகைகளை நிர்மாணிப்பதற்கும் சேவைகளுக்குமான விவசாயக் கடன் நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.

(ஆ) விவசாய மற்றும் தொடர்புபட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள தனியார்துறை முதலீட்டாளர்களுக்கு உதவுதல்.

(இ) விவசாயத்துறை மற்றும் அதனோடொத்த துறைகளில் புதிய தொழில்வாய்ப்புக்களை உருவாக்குதல்.

(ஈ) விவசாய மற்றும் கால்நடை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக இடைக்காலக் கடன்களை வழங்குதல்.

(உ) சிறிய விவசாயிகளுக்கு புதிய தொழிநுட்ப முறைகள் மற்றும் சந்தை வாய்ப்புகளுக்கு மாற்றமடைவதற்கு புதிய பாதைகளை உருவாக்குதல்.

(ஊ) வாழ்வாதார மட்டத்திலிருந்து வர்த்தக மட்டம் வரை சிறிய விவசாயிகளுக்கு சந்தர்ப்பங்களை வழங்குதல்.

(எ) முழு அளவில் விவசாயத்தின் உற்பத்தி மட்டத்தை ஊக்குவித்தல்.

1.2 பங்கேற்பு நிறுவகங்கள் மற்றும் அவர்களது பொறுப்புகள்

பங்கேற்பு நிறுவகங்களின் பிரதான பொறுப்புக்கள் பின்வருமாறாகும்.

(அ) இலங்கை மத்திய வங்கியின் பிராந்திய அபிவிருத்தி திணைக்களம்

விவசாய – கால்நடை வள அபிவிருத்தி கடன் திட்டம், வட்டி மானிய முறைமை மற்றும் PSF இன் அமுலாக்கமும் கண்காணிப்பும்.

(ஆ) நிதி, திட்டமிடல் அமைச்சின் அபிவிருத்தி நிதி திணைக்களம்

விவசாய – கால்நடை அபிவிருத்தி கடன் திட்டம் மற்றும் வட்டி மானிய முறைமையின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்து கண்காணித்து வட்டி மானியக் கொடுப்பனவிற்கான போதிய பாதீட்டு ஏற்பாடுகளை வழங்குதல்.

(இ) கால்நடை அபிவிருத்தி அமைச்சு

விவசாய – கால்நடை அபிவிருத்தி கடன் திட்டத்துடன் ஈடுபட்டுள்ள PCI கள் மற்றும் விவசாயிகளுக்கு தொழிநுட்ப உதவிகளை வழங்குதல்.

(ஈ) பங்கேற்பு கடன் நிறுவகங்கள் - தலைமை அலுவலகங்கள்

ஓர் சிரேஷ்ட உத்தியோகத்தரின் கீழ் முறைமையின் சகல நடவடிக்கைகளையும் நிர்வகித்தல்.

பங்கேற்புக் கடன் நிறுவகங்கள் - கிளைகள்
கடன்களின் இலக்கு மற்றும் நலனாளிகளைத் தேர்தெடுத்து நலன்களை வழங்கி PCI களின் தலைமை அலுவலகத்திற்குக் கடன்முறைமைகளின் முன்னேற்றத்தை அறிவித்தல்.

விவசாய – கால்நடை வள அபிவிருத்தி கடன் திட்டத்தை அமுலாக்குவதற்கு இலங்கை மத்திய வங்கியால் பின்வரும் PCI கள் தேர்தெடுக்கப்பட்டுள்ளன.

இலங்கை வங்கி
மக்கள் வங்கி
ஹட்டன் நஷனல் வங்கி
இலங்கை கொமர்ஷல் வங்கி
சம்பத் வங்கி
லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி
சனச அபிவிருத்தி வங்கி
ஊவ அபிவிருத்தி வங்கி
றுகுணு அபிவிருத்தி வங்கி*
வயம்ப அபிவிருத்தி வங்கி*
கந்துரட்ட அபிவிருத்தி வங்கி*
ரஜரட்ட அபிவிருத்தி வங்கி*
சபரகமுவ அபிவிருத்தி வங்கி*

* இவ் வங்கிகள் 2008 இன் 41 ஆம் இலக்க பிரதேச சங்வர்தன வங்கி அதிகாரச் சட்டத்தின் கீழ் 2010 யூலை 25 இலிருந்து அமுலாகும் வகையில் பிராந்திய அபிவிருத்தி வங்கியாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

1.3 இலக்குகள்

மூன்று ஆண்டு காலப்பகுதியின் போது ரூபா 5,000 மில்லியன் பெறுமதியான கடன்களை வழங்குவதற்கும் அதன் மீது இலங்கை மத்திய வங்கியால் 5 சதவீத வட்டி மானியத்தை வழங்குவதற்கும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

**கணக்காய்வு பற்றி மேலதிகமானவை**

1. களஆய்வு

அடிமட்டத் தரத்தில் நலனாளிகளால் விவசாய – கால்நடை அபிவிருத்தி கடன் திட்டத்தின் நலன்கள் எய்தப்பட்டுள்ளமையை உறுதிப்படுத்துவதற்காக கணக்காய்வுக் குழுவால் கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட முன்னர் இலங்கை மத்திய வங்கி, நிதி, திட்டமிடல் அமைச்சு மற்றும் PCI களின் சிரேஷ்ட உத்தியோகத்தர்களுடன் பல கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன. PCI களின் கூட்டிணைப்புக் கிளைகளிடம் இருந்து சேகரிக்கப்பட்ட தகவலை அடிப்படையாகக் கொண்டு கணக்காய்வுக் குழு அங்கத்தவர்கள் குருநாகல், கண்டி, கம்பஹா மற்றும் அனுராதபுர மாவட்டங்களில் 67 கால்நடை பண்ணைகளுக்குச் சென்றிருந்தனர். கால்நடை விவசாயிகளிடம் இருந்தும் PCI களிடம் இருந்தும் தகவல்களைச் சேகரிப்பதற்காக ஓர் வினாக் கொத்து பயன்படுத்தப்பட்டுள்ளது.

2. கள ஆய்விற்கான மாதிரிகளின் தேர்வு

விவசாய – கால்நடை அபிவிருத்தி கடன் திட்ட நலனாளிகளின் சனத்தொகையில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாதிரிகளை அடிப்படையாகக் கொண்டு கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. மாதிரிகளின் தேர்விற்காக பின்வரும் காரணிகள் கருத்திற்கொள்ளப்பட்டுள்ளன.

(அ) நாட்டின் விவசாய காலநிலை நிலமைகளின் படி இலங்கை விவசாய கால்நடை நடவடிக்கைகள் மாறுபட்டிருந்தன. ஆகவே, கீழ் நாடு, ஈர வலயம், உலர் வலயம் மற்றும் தெங்கு முக்கோண வலயம் போன்ற விவசாய காலநிலை வலயங்களில் உள்ள மாவட்டங்களில் இருந்து மாவட்டங்களின் தேர்வு இடம்பெற்றுள்ளது. மேலும், விவசாய – கால்நடை அபிவிருத்தி கடன் திட்டத்தின் முறைமையை அமுலாக்கிய மாவட்டங்களில் அவை ஆரம்பிக்கப்பட்டது முதல் கள ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டிருந்தன.

(ஆ) கூடியளவில் பதிவுகளை மேற்கொண்ட மற்றும் கடன்களை வழங்கிய PCI கள் மாதிரி அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

எவ்வாறெனினும், அரசுடமையாக்கப்பட்ட PCI கள் ஏனைய PCI களைப் பார்க்கிலும் அதிகளவு எண்ணிக்கையிலான கடன்களை வழங்கியிருந்தன.

(இ) தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள PCI களின் கிளைகள் விவசாய – கால்நடை அபிவிருத்தி கடன் திட்டத்தின் கீழ் கடன்கள் வழங்கப்பட்ட எண்ணிக்கையின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. அதிகளவு எண்ணிக்கையிலான கடன்களை வழங்கும் கிளைகளுக்காக முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.

(ஈ) உரிய PCI களால் பேணப்பட்ட கடன் கோவைகளின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட கால்நடை விவசாயிகளே பேட்டி காணப்பட வேண்டியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தனர். அத்தகைய விவசாயிகளின் கால்நடை பண்ணைகள் கணக்காய்வுப் பிரிவினரால் பௌதீக ரீதியில் ஆய்வு செய்யப்பட்டிருந்தன.

(உ) இலங்கை மத்தியவங்கியின் PSF இன் கீழ் ஊக்குவிப்புகள் வழங்கப்படுவதற்காக இலங்கை மத்திய வங்கியில் இருந்து சேகரிக்கப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு பேட்டி காண்பதற்காக LDO கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தனர்.

**இணைப்பு – 3**

## செயலாற்றல் கணக்காய்வை நடாத்துவதில் உள்ள வரையறைகள்

இச் செயற்பாட்டுக் கணக்காய்வின் போதான பின்வரும் வரையறைகள் இந்த அறிக்கையில் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளுக்கு உட்பட்ட பொறுப்பு வாய்ந்த நிறுவகங்கள்/ வாசிப்பவர்களின் நலன்களுக்காக வழங்கப்படுகின்றது.

(அ) ALDL திட்டத்தின் கண்காணிப்பிற்காகவும் அமுலாக்கத்திற்காகவும் நிதி திட்டமிடல் அமைச்சு, , கால்நடை அபிவிருத்தி அமைச்சு, இலங்கை மத்திய வங்கி மற்றும் பங்கேற்புக் கடன் நிறுவகங்கள் போன்ற பல நிறுவகங்கள் பங்கேற்றிருந்ததுடன் ஒவ்வொரு நிறுவகங்களாலும் வழங்கப்பட்ட புள்ளிவிபரங்களும் தகவல்களும் கள ஆய்வுகளின் போது சேகரிக்கப்பட்ட உறுதிப்படுத்தும் சான்றுகளுடன் இணங்கியிருக்கவில்லை. ஆகவே, தனித்தனி நிறுவகங்களினால் வழங்கப்பட்ட புள்ளிவிபரங்கள் மற்றும் தகவல்கள் இணக்கம் செய்யப்படுவதற்கு மேலதிக மணித்தியாலங்கள் தேவைப்பட்டன.

(ஆ) கள ஆய்வுகளில் விலங்குகளை இனங்காண்பதற்கு ஏதுவான வகையில் படங்கள், செவிப்பட்டை இலக்கங்கள் முதலியன போன்றவை குறித்த விவசாய – கால்நடை வள அபிவிருத்தி கடன் திட்டக் கோவைகளில் சில பங்கேற்புக் கடன் நிறுவகங்களால் பேணப்படாமை காரணமாக கடன் நலன்களிலிருந்து விவசாயிகளால் பசுக்களை / கன்று போடாத பசுக்களை இனங்காண்பதற்கு முடியாதிருந்தது. முறையான இனங்காணல் நோக்கத்திற்காக விவசாயிகளால் கடன்களும் செவிப்பட்டை இலக்கங்கள் பிணைக்கப்பட்டு கடன்கள் பெற்றுக்கொள்ள முன்னர் பசுக்களை பதிவு செய்துகொள்வதற்கான வழமை இருக்கவில்லை.

(இ) கள ஆய்வுகளின் போது எதிர்நோக்கிய போக்குவரத்துப் பிரச்சனைகள் காரணமாக அவர்களது வீடுகளில் சில கடனாளிகளை சந்திப்பதற்கு முடியாதாகையால் பல சந்தர்ப்பங்களின் போது மாத்திரம் கடனாளிகளை மாற்ற வேண்டியேற்பட்டது.

(ஈ) கடனாளிகளால் விலங்குகளின் உரிமை மாற்றங்கள் தொடர்பான ஆவணங்கள் (பால் விற்பனைக்கான பதிவேடுகள்) பால் உற்பத்தித் தொகை போன்ற சில தகவல்களை உறுதிப்படுத்தும் சான்றுகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.